புதுமலர் : 07 இதழ் : 01

## தை - மாசி

# அனல்

2010

கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்.
யோசுவா 3:5

இணை ஆசிரியர்கள்
யோ. நிக்ஷன்
வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்

**ஆவியிலே அனலாயிருங்கள்**
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

ரோமர் 12:11

சீயோன் தேவாலயப் பிரசுரம்
ZION CHURCH PUBLICATION

01. 01. 2010

## பொருளடக்கம்


- அனலின் குரல்
- என்ன தருவேன் உமக்கு
- யாருக்குத் தெரியும்
- பூவரி முத்துக்கள்
- வாலிபர் வளாகம்
- வித்திடும் வித்தகர்கள்
- அனலின் நற்செய்தி
- வினாவிடை - 37
- தேவ பிரசன்னமும் மெய்யான விடுதலையும்
- குறுக்கெழுத்துப்போட்டி
- பக்தர்களின் பயிலகம்
- ஒரு வாசகரின் சாட்சி
- புத்தாண்டில் அற்புதத்தின் அறைகூவல்


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும் வேதனையினாலும் குடும்பப் பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுதவேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

The Editor "Anal"
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.

ஆசிரியர் "அனல்"
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

T.P. : 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11

# அனலின் குரல்



இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்கள். கர்த்தருடைய கிருபையாலே இப்புதியாண்டுக்குள் வந்திருக்கின்றோம். கடந்த வருடத்தில் கர்த்தர் நன்மைகளால் நிரப்பினார், போஷித்தார், ஆபத்து வேளையிலே பாதுகாத்தார், துன்பத்தின் நேரங்களில் தூக்கிச் சுமந்தார், நோய்களில் இருந்து பாதுகாத்தார். அவருடைய அன்பு அளவுக்கதிகமாக சென்ற ஆண்டில் எமக்கு வெளிப்பட்டது.

“உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்” என்ற அந்த வாக்குத்தத்தை கொடுத்த தேவன், அந்த வாக்குத்தத்தத்தை எமக்கு நிறைவேற்றினார். சகல மகிமையும், நன்றிகளும் கர்த்தருக்கே உரித்தாகட்டும்!

கிறிஸ்துவுக்குள் அன்பின் வாசக உள்ளங்களே கடந்த ஆண்டில் நல்லவராக இருந்த தேவன் இப்புதியாண்டிலும் உங்களை அளவற்ற விதத்தில் ஆசீவதிப்பாராக.

ஆசிரியர்.

## 2010 புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இப்புத்தாண்டில், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் அன்பில் வேரூன்றி வளர்ந்து, கனிகொடுத்து அனேகருக்கு நீங்கள் ஆசீர்வாதமும், ஆறுதலுமாக இருந்து, இயேசுகிறிஸ்துவுக்கு நற்சாட்சியாக வாழவும்; கிறிஸ்துவுக்குள்ளான சகல ஆசீர்வாதங்களும் பெற்று; சரீரத்திலும், ஆவியிலும் ஆரோக்கியமுள்ளவர்களாக ஜீவித்து, கர்த்தருக்காய் வைராக்கியம் காண்பித்து, கிறிஸ்துவின் நாளுக்கென கறைதிறை பிழையற்றவர்களாக வாழ அனலின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

கதையும் கற்றதும்

# என்ன தருவேன் உமக்கு???

**"அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள். இவ்வருடம் உங்கள் எல்லோருக்கும் தேவ ஆசீர்வாதமும், தயவும் நிரம்பியதாக இருக்க வாழ்த்துகிறேன். நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் நிறைவான கிருபையும், தயவும், காருண்யமும் உங்கள் வாழ்வின் பங்காக மாறக்கடவது. தேவன் தனது அளவில்லாத ஆனந்தத்தால் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக. கையின் பிரயாசங்களுக்கான செழிப்பையும், முயற்சிகளுக்கான பலனையும் கட்டளையிடுவாராக. இந்த ஆண்டு நீங்கள் தேவனுக்காக வாழ்கின்ற, அவருக்காக இன்னும் அதிகமான காரியங்களை செய்கின்ற ஓர் ஆண்டாக விளங்க எம்மைத் தமது திரு ரத்தத்தினாலே மீட்டெடுத்த தேவன் உதவி புரிவாராக" இவ்வாறு தனது வாழ்த்துக்களைக் கூறி முடித்தார் போதகர். அந்தப் புதவருட ஆராதனையில் கூட்டம் நிரம்பி வழிந்தது, எல்லோரும் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருந்தனர், பாடல்கள் பாடி தேவனை மகிமைப்படுத்திக் கொண்டிருந்தனர்.**

காணிக்கை செலுத்தும் நேரம் வந்தது. போதகர் **"எமக்காக தனது உயிரையே கொடுத்து எம் பாவங்களை மன்னித்து புதுவாழ்வு தந்த எம் இரட்சகருக்கு உங்கள் நன்றிகளை செலுத்தும் நேரம் இது. அவர் எமக்குத் தந்தவைகளில் இருந்து அவருக்குக் கொடுப்போம்! அது நிச்சயம் எமக்கு ஆசீர்வாதத்தைத் தரும்"** என்று கூறினார். அனைவரும் எழுந்து வந்து தமது காணிக்கைகளை சமர்ப்பித்தனர். சிறியோர் முதல் பெரியோர் வரை தமது காணிக்கைகளைக் கொடுத்தனர். தமது காணிக்கைகளைக் குறித்துப் பெருமிதம் அடைந்தவர்களும் அந்தக் கூட்டத்தில் இருக்கத்தான் செய்தனர்.

ஆராதனை முடிவடைந்தது, எல்லோரும் ஒருவரை ஒருவர் வாழ்த்தி சந்தோஷமாகப் புறப்பட்டனர். கடைசியில் ஒரு சிறு பையன் தயங்கித் தயங்கி போதகரை நோக்கி நடந்து வந்தான். அவனது கண்களில் ஏக்கம், முகத்திலே துக்கம். போதகர் அவனைக் கண்ட போது அவனை அணைத்து என்னவென்று கேட்டார் **"ஐயா! நீங்கள் இயேசு சுவாமிக்குக் கொடுக்கச் சொன்னீர்கள் ஆனால் கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமே இருக்கவில்லை! இங்கிருந்த அனைவருமே ஏதோவொன்றை கொடுத்தார்கள். ஆனால் என்னால் முடியவில்லையே. இந்த புதிய ஆண்டிலே நான் இயேசு சுவாமிக்கு ஏதாகிலும் கொடுக்க வேண்டும் என தேம்பி அழுதான்!** போதகரின் உள்ளம் நெகிழ்ந்தது. அவனை அப்படியே அணைத்துத் தூக்கினார். வார்த்தைகள் வெளிவரவில்லை. அந்தப் பிஞ்சு உள்ளத்தில் இயேசுவின் மேல் இருந்த அன்பை எண்ணி மகிழ்ந்தார். அந்த உள்ளத்தின் விம்மலை போதகரால் உணர முடிந்தது. அவனை அப்படியே அணைத்து வைத்திருந்தார்.

திடீரென அவன் கீழே இறங்க முற்பட்டான், இறங்கியவன் போதகரின் கையைப் பிடித்து முன்னாக அழைத்துச் சென்றான். அவன் தனது கையில் இருந்த கைக்குட்டையை நிலத்திலே விரித்தான். போதகரை ஒரு கணம் பார்த்து விட்டு தனது சிறிய பாதங்களை அந்த கைக்குட்டையின் மேல் வைத்து அதன் மேலாக ஏறி நின்றான. "**நான் என்னையே இயேசுவுக்குக் கொடுக்கிறேன்! என்னிடம் வேறு ஒன்றுமில்லை. என்னை ஏற்றுக்கொள்வாரா**" என்று கேட்டான். போதகரின் கண்கள் கலங்கின. அவனை அணைத்து முத்தமிட்டு "**இந்த ஆராதனையில் இயேசுவுக்கு கொடுக்கப்பட்ட காணிக்கைகள் எல்லாவற்றிலும் விலையுயர்ந்தது நீ தான்!**" என்றார். அந்த சிறுவனின் கண்களில் திருப்தி, முகத்தில் மகிழ்ச்சி. "**என் இயேசுவுக்கு நான் என்னையே கொடுத்து விட்டேன்!**" எனக் கூச்சலிட்டான்.

பிரியமானவர்களே, அந்த சிறு பையனைப் போல இந்தப் புதிய ஆண்டில் எம்மைத் தேவனிடம் முற்றாக அர்ப்பணிப்போமா? பொன், வெள்ளி, வைரங்கள் இவை அனைத்தையும் விட தேவன் எம்மையே முழுவதுமாக தன்னிடம் தர வேண்டும் என எதிர்பார்க்கிறார். எம்மை உருவாக்கி, எம் நாசியிலே ஜீவ சுவாசத்தை தந்த எம் தேவனிடமே எம்மை மீண்டும் ஒப்படைப்பது எவ்வளவு மேன்மையான காரியம். எம்மைத் தம் உள்ளங்கையில் ஏந்தி காத்து வழிநடத்துவார். அந்த சிறுவன் செய்ததைப் போல "**ஆண்டவரே உம்மிடம் என்னையே தருகிறேன் ஏற்றுக் கொள்ளும்**" என்று சொல்வோமானால் இந்த ஆண்டு எமக்குச் செழிப்பையும், பூரணத்தையும் தருவது நிச்சயம்! தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து, இந்த புதிய ஆண்டில் உங்களை அதிசயமாக வழிநடத்துவாராக.

**"என்ன தருவேன் உமக்கு...... நான் என்னைத் தருவேன் உமக்கு"**

**கெ. இன்பரூபன்.**

## வினாவிடை 36 சரியான பதில்கள்

01. நப்தலியின் மகன்
02. தாவீதின் வாசல்க் காவலாளர்கள்
03. காதேசுக்கும் ஏதோமுக்கும் இடையில்
04. திபேரியா
05. மோவாப்
06. அசெனாவின் குமாரர்
07. சகரியா
08. எலியா
09. இயேசுக்கிறிஸ்து
10. தாவீது



# யாருக்குத் தெரியும்.

இன்று எமது நாட்டில் பல மக்கள் பல விதமான சூழ்நிலைகளில் வாழ்கின்றார்கள். யுத்தத்தின் பின்னால் பற்பல இழப்புக்கள் மத்தியில் வேதனையுடன் வாழும் ஒரு கூட்டம் மக்கள், யுத்தம் ஓய்ந்ததினால் ஓடி, ஓடி உலாவரும் மக்கள் இன்னொரு கூட்டம், என்ன நடந்தாலும் நடக்கட்டும் எனக்குப் பாதிப்பு வராவிட்டால் சரி என்கிற ஒரு கூட்டம், இந்தக் காலகட்டத்தில் எதனை எப்படி அனுபவிக்க முடியும் என்று அங்கலாய்க்கும் கூட்டம் ஒருபுறம்.

எப்படி இருப்பினும் இன்று பலருடைய இருதயத்தின் அடிமனதில் இருக்கும் ஒரு கவலை, ஏக்கம், தவிப்பு என்னை யாருக்குத் தெரியும், எனது வேதனை யாருக்குப் புரியும், எனது தனிமை உணர்வை யார் அறிந்து கொள்வார்கள். இப்படியான ஏக்கத்துடன் இருக்கும் சகோதரா!! சகோதரி!!

நீ படும் வேதனைகள் பலருக்கு ஒரு சுவையான, பேச்சுக்கு கருவாக அமைந்துள்ளது. உனது உண்மை நிலையைக் கண்டும் அதனைத் திரிபுபடுத்தி பேசுபவர்கள் எத்தனை பேர், அன்புடன் பேசுவது போல் பேசி உள்ளத்தின் ஆழத்தில் இருந்து ஆலோசனை என்று உன் ஆத்துமாவைப் பிளக்கும் கூரிய வார்த்தைகள், நண்பன், தகப்பன், தாய், சகோதரி என்று உறவு வார்த்தைகளைக் கூறி உன்னை ஏமாற்றியவர்கள் எத்தனை பேர், அணைப்பதற்குப் பதிலாக தள்ளி விட்டோர் எத்தனை பேர், உனது வேதனைக் கண்ணீர், பலருக்கு ஆனந்தக் கண்ணீராக இருக்கிறது. இப்படி நீ காணும் போது என்னை யாரும் புரிந்து கொள்ளவில்லையே! நான் யாரைத் தான் நம்புவதோ!! என்று ஏங்கும் சகோதரா, சகோதரி உன்னைப் புரிந்து கொள்ள ஒருவர் இருக்கின்றார், அவர் தான் **இயேசுகிறிஸ்து:** இந்தப் பெயரை நீ வாசிக்கையில் ஏதோ ஒரு மதத்தினரைப் பற்றி நான் எழுதுவதாக நினைக்காதே. இயேசுகிறிஸ்து என்பவர், ஒரு மதத்திற்குச் சார்பானவர் அல்ல. துக்கம் என்னவென்றால், மக்கள் அவரை ஒரு மதத் தலைவராக மாற்றி விட்டார்கள். அவருடைய பெயரை உபயோகித்து தமக்கு ஆதாயம் தேடிப் போகின்றவர்கள் இன்று அநேகர்.

இயேசுகிறிஸ்துவை, சர்வ வல்லமை உள்ள தேவன் மனுக்குலத்தின் மீட்புக்காக பூமிக்கு மனிதனாக அனுப்பினார். மனிதன் பாவம் செய்து, பாவத்தில் உழன்று வெளியே வர முடியாதவனாய் அழிந்து கொண்டு இருந்த வேளையில் இயேசு பூமிக்கு வந்தார். இவர் தேவனுடைய தற் சொரூபமும், அவரின் ஒரே பேறான குமாரனுமானவர்.

இந்த இயேசு பூமிக்கு மனிதனாக வந்தார், மனிதனைப் பாவத்திலிருந்து, வியாதியில் இருந்து, வறுமையில் இருந்து, பாவப்பழக்கவழக்கத்தின்

அடிமைத்தனத்திலிருந்து மீட்கவே அவர் மனிதனாக வந்தார். அவர் பூமியில் வாழ்ந்த போது நம்மைப் போலவே பாடுகள், வேதனைகள், அவமானங்கள் என பலவழிகளில் துன்புற்றார், நம்மைப் போலவே சோதிக்கப்பட்டார். தேவன் எம்மீது கொண்ட அன்பினால் இயேசுகிறிஸ்துவை எமது பாவத்தின் பரிகாரமாக கொடூரச் சிலுவையில் மரணிக்க அனுமதித்தார். "**இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவம் மன்னிக்கப்படுவது இல்லை**" இது தேவனின் திட்டம், இயேசு எமக்காக சிலுவையில் மரிக்க தன்னையே ஒப்புக் கொடுத்தார், வாரினால் அடிக்கப்பட்டார், சிலுவையில் அறையப்பட்டார், மரித்த அவரை அடக்கம்பண்ணினார்கள். மூன்றாம் நாள் அவர் உயிருடன் எழுந்தார். இன்றும் அவர் ஜீவிக்கின்றார்.

அவர் ஜீவிப்பதால் அவர் எம்மை நன்கு அறிந்தவராகவும், எமது பாடுகள், வேதனைகளை அறிந்தவராயும் இருக்கின்றார். (உதாரணம்) இயேசு பூமியில் இருந்த போது, தன் சகோதரன் மரித்ததால் வேதனைப்பட்டு கண்ணீர் விட்ட மரியாளுடன் இயேசுவும் கண்ணீர் விட்டார் என்று எழுதப்பட்டுள்ளது.

"**இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்**" இன்று உன் வேதனை, பாடுகள், சந்தோஷம், அனைத்தும் அறிந்தவர், உன்னை நன்கு புரிந்தவரும் அவரே, அவர் தான் இயேசுகிறிஸ்து. இன, மத, மொழி வேறுபாடு இன்றி எல்லாரையும் ஒன்று போல நேசிக்கும் நேசரே இயேசு. அவரை நோக்கி நீ கூப்பிடு அவர் பதில் தருவார். நீ விசுவாசத்துடன் அவரை நோக்கி, இயேசுவே எனக்கு இரங்கும் என் பாவத்தையும், எனது அக்கிரமத்தையும் மன்னியும் என்று மனதார மனம் கசந்து கேட்டால் அவர் கட்டாயம் உன்னை மன்னிப்பார், உன்னை மன்னிப்பது மட்டுமல்ல உன் பாவங்களை மன்னித்து மறந்தும் விடுவார்! அத்தனை அன்புள்ள இயேசு உன் சொந்தமானவர், உன்னைப் புரிந்து கொண்டு, அணைத்துக் கொண்டு, பரிசுத்தப் பாதையில் அவர் உன்னை நடத்தி ஆசீர்வதிக்கவல்லவர்.

இந்த 2010 ஆம் ஆண்டில் உன் மேல் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை கூறி நல்வழியே நடத்தும் இயேசுகிறிஸ்து உன்னோடு இருப்பாராக!!!!

**போல்.கி.சோ**

## குறுக்கெழுத்துப் போட்டி 34 சரியான விடைகள் எழுதியவர்கள்

01. ச. சனோஜா - மீசாலை
02. S. மனோகரி - நீர்வேலி
03. ச. யோகேஸ்வரி - மீசாலை
04. S. மாக்கிரட் - மீசாலை
05. ந. தர்ஷினி - யாழ்ப்பாணம்.



# ஹைக்கூ

# முத்துக்கள்

தொலைக்கப்பட வேண்டியவைகள்
பணம் பொருள் அல்ல
தோல்விகளே.

மிதிபட்டு மிதியடி ஆகு
அதுவே
வீரனின் அழகு.

பாடுகளின் வழியிலே
பயணங்கள் போவது
பரிசுத்தமே

உலகில் நீ பெறும்
கிரீடங்கள்
மச்சுவிடும் மறுநாள்

எத்தனை அருவிகள்
பாய்ந்தாலும்
அத்தனையையும் சேர்ப்பது நதி

உன்னை மறைத்து
உண்மையாய் வாழ்
உயிருடன் உணர்வாய்

சத்தியங்கள் பேசினால்
சத்துருவுக்குப்
பேரிடி

எதை நீ நினைத்தாயோ
அதுவே
நீயாவாய்

செதுக்கப்பட இடம்
கொடு, இல்லை
சிதறிடுவாய்

தேவனின் பெரிய
கரத்தில் - நாம்
வெறும் தூசிகளே




# கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்

## *I am crucified with Christ*

**இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்.**

புதிய தீர்மானங்கள் பலவற்றை எடுத்து புதுப் பொலிவுடன் நுழையும் வேளையில் புயல்கள் உன்னை இன்னும் அதிகமாகவும், வேகமாகவும் தாக்கலாம். சகோதரனே(தரியே) நீ இயேசுவுடனே இணைக்கப்பட்டு, அவரோடு கூட பிழைத்திருக்கும் ஓர் பாக்கியத்தை உண்மையாகவே வாஞ்சிப்பாயா!

எனது இருதயத்தில் தாகத்தைத் தூண்டும், கண்களில் கண்ணீரை வரவழைக்கும் சில அருட்பணியாளர்களின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து உனக்கு முன் ஒரு வாலிப அருட்பணியாளனை வைக்க விரும்புகிறேன். உன்னிலும் இது உண்மையாகுமா?

### இரண்டு அன்புகளுக்கு இடையில் சிக்கித்தவித்தவர்.

இரண்டு அன்புகளின் பால் ஈர்க்கப்பட்டு சிக்கித்தவித்த தேவபணியாளன், மிஷனரி ஹென்றி மாட்டின். இவரது வாழ்க்கை ஓர் அருமையான காதல் காவியமாகும். ஹென்றி மாட்டின் 1781ம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள கொர்ன்வால் (cornwall) என்னுமிடத்தில் ஒரு வியாபாரியின் மகனாகப் பிறந்தார். மிகவும் வறியவர் என்று கூறுவதற்கு இல்லை, பாடசாலை வாழ்வை முடித்தவர் இங்கிலாந்தில் தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான கேம்ரிஜ் இல் கணிதத்துறையில் அதி சிறந்த புள்ளிகளோடு பட்டம் பெற்றார்.

தேவனுக்கு புறமுதுகு காட்டிய ஹென்றியை அவரது தந்தையின் மரணமும், சகோதரியின் ஜெபமும், தேவபக்தியான போதகர் ஒருவருடைய ஆலோசனையும், டேவிட் பிரெய்னார்ட் என்னும் அருட்பணியாளரின் எழுத்துக்களும் தேவனுக்கு அடிபணிய வைத்தது. அதன் பின்பு நாடுகடந்து அருட்பணி ஊழியம் குறித்து நாட்டங் கொள்ளத் தொடங்கினார். முன்னைய தேவ மனிதர்களின் முன்மாதிரியும்,

இந்தியாவில் வில்லியம் கேரியின் கன்னி முயற்சியும் இவருக்கு பெரும் உந்துதலாயிருந்தது. நாடு கடந்த அருட்பணி ஊழியம் அவரது ஒரே நோக்கமாக உருப்பெற்றது. அதிக நேரம் ஜெபத்திலும், தியானத்திலும் ஈடுபட்டார். ஆண்டவருக்காக அர்ப்பணிப்புடன் ஊழியம் செய்ய ஆவல் கொண்டார்.

## அழகிய லீதியா

அறிவில் சிறந்த ஹென்றி மாட்டின் அழகில் குறைந்தவராய் காணப்பட்டார். அனைத்தையும் துறந்து ஆண்டவரை சேவிக்க ஆர்வம் கொண்ட இம் மனிதனுக்கு வாழ்வில் ஓர் அழகி குறுக்கிட்டாள். தன் உறவுமுறையான அப்பெண் அழகில் மட்டுமல்ல, வயதிலும் ஹென்றியை விட கூடியவள். லீதியா ஹென்றியின் மனதில் ஆழமாக இடம் பிடித்தாள். காதல் மலர்ந்தது, அவனின் சிந்தனை எல்லாம் லீதியாவால் நிறைந்தது, ஹென்றி லீதியாவை இதயபூர்வமாக நேசித்தான்.

## இந்தியாவா? லீதியாவா?

லீதியாவை அதிகம் நேசித்த ஹென்றி, ஆண்டவர் இயேசுவையும் அதிகமாக நேசித்தார். எனவே இந்தியாவுக்குப் போக ஒரு வருடகாலமாக திட்டங்கள் தீட்டி ஆயத்தமாகிக் கொண்டு இருந்தார். லீதியாவை திருமணம் செய்து கொண்டு அவளையும் இந்தியா அழைத்துக் கொண்டு செல்ல ஆசை கொண்டார். ஆனால் லீதியாவோ இந்தியாவுக்கு போவதற்கு மறுத்தாள். இந்தியாவுக்கு இறை இயேசுவின் பணியை செய்ய செல்வதா? அல்லது இங்கிலாந்தில் இல்லறவாழ்வில் ஈடுபடுவதா? என்ற போராட்டம் ஹென்றிக்குள் எழுந்தது. இந்தியாவா? லீதியாவா? என்று மாட்டீன் இரண்டு அன்புகளுக்கு இடையில் சிக்கித் தவித்தார். அவர் உள்ளத்தில் உலக மகாயுத்தமே நடந்தது. இந்தியாவா? லீதியாவா? என்று போராடுகையில் உண்மையில் **லீதியாவா? ஆண்டவரா?** என்றே ஹென்றி போராடினார்.

லீதியா இல்லாத வாழ்வை நினைத்துப் பார்க்கவே கஸ்டப்படுமளவிற்கு லீதியாவை நேசித்தவர் அதிலும் அதிகமாக தன் இரட்சகரை (இயேசுவை) நேசித்ததால் லீதியாவுக்கு பிரியாவிடை, இல்லை இல்லை தன் காதலுக்குப் பிரியாவிடை சொல்லி, 1805ம் ஆண்டு சபைப் போதகராக நியமிக்கப்பட்ட ஹென்றி அதற்கு அடுத்தமாதம் தன் இதயத்தில் இடம் பிடித்தவளை இங்கிலாந்தில் விட்டு விட்டு இந்தியா நோக்கிப் பயணமானார். இறை அழைப்புக்கு இடையூறாக வந்த அவ் இளம் பெண்ணை, இறைவன் மேல் வைத்த அன்பின் நிமித்தம் விட்டு விட்டு இந்தியா நோக்கி பயணமானார். அழைப்பை நிறைவேற்றப் போகின்றேன் என்ற சந்தோஷம் ஒரு புறம் இருந்தாலும், லீதியாவைப் பிரிகிறேன் என்ற துயரம் அவருக்கு மறு புறம் அகலாது இருந்தது.

## இந்திய மண்ணில் இறை ஊழியம்

இந்தியாவில் அடியெடுத்து வைத்த அவர் **"நான் இப்பொழுது ஆண்டவருக்காக எரிந்து பிரகாசிக்கட்டும்"** என்று வாஞ்சித்து கதறினார். அங்கு இறங்கி, அருட்பணியின் கதாநாயகன் வில்லியம் கேரியையும், ஏனைய

தேவ மனிதர்களையும் சந்தித்தார். அவர்கள் ஹென்றியின் புத்திக் கூர்மையைக் கண்டு வேதாகம மொழி பெயர்ப்பில் ஈடுபடுமாறு ஊக்குவித்தனர். ஆயிரக்கணக் கான ஆசியா நாட்டவர்களுக்கு வேதாகமத்தை மொழி பெயர்த்துக் கொடுக்க பேராவல் கொண்டார்.

இந்தியா வந்ததும் லீதியாவை மறந்து விட்டார் என நாம் எண்ணலாம். ஆனால் உண்மை அதுவல்ல. **"ஒரு நாள் அவர் லீதியாவோடு பேசிக் கொண்டு இருக்கிறார்"** திடீரென விழித்து அது கனவு என்று உணர்ந்து அழுதார். இவரும் நம்மைப் போல ஓர் சாதாரண மனிதனாய் இருந்தவரே! எமக்குள்ள போராட்டங்கள் அவருக்கும் இருந்தது. லீதியாவோடு கடிதத் தொடர்பு வைத்திருந்த அவர் இந்தியாவுக்கு வந்து தன்னை மணக்குமாறு அழைத்தும் லீதியா மறுத்து விட்டாள். ஆனால் அழைப்பை மறந்து இங்கிலாந்து போய் இல்லற வாழ்வில் ஈடுபட ஹென்றி விரும்பவில்லை. தனக்கு வேதனையாய் இருந்தாலும் ஆண்டவரை வேதனைப்படுத்த விரும்பாத தேவ மனிதர் அவர்.

இந்துஸ்தானி மொழி பெயர்ப்பு அச்சிடுவதற்கு தயாரான நிலையில் இருக்கை யில் தன் சரீர பெலவீனத்தின் மத்தியிலும் அவ் மொழிபெயர்ப்பைப் பூரணப்படுத்தினார்.

1812ல் ஹென்றியின் உடல் நிலை மோசமாகியது, இங்கிலாந்து போய் இதற்கு மருந்து செய்வதே ஒரே தீர்வாய் இருந்தது. இங்கிலாந்து போனால் லீதியாவோடு தன் உறவைப் புதுப்பிக்கவும் ஒரு தருணமாகவும் அது அமையும். நேரடியாக அவளை சந்திக்கவும், ஊழிய அனுபவங்களைச் சொல்லவும் அவருக்கு வாய்த்திருக்கும். ஆனால் அச்சந்தர்ப்பம் அவருக்கு கிடைக்கவில்லை... 31வயதுடைய ஹென்றி மாட்டின் சின்ன ஆசியாவில் 1812ல் தான் நேசித்த ஆண்டவரிடம் சேர்ந்தார்.

அருட்பணியாளர்கள் என்றவுடன் எம்மால் செய்ய முடியாத ஒன்றை சாதித்தவர்களாகவே அவர்களைப் பார்க்கின்றோம். ஆனால் அவர்களும் நம்மைப் போல சாதாரண மனிதர்களே! அவர்களைக் கொண்டு கிரியை நடப்பித்த அதே தேவன் பெரிய காரியங்களைச் செய்வார்.

இதை வாசிக்கும் என் அன்பின் சகோதரர்களே! ஆண்டவர் இயேசு உங்களையும் அழைக்கிறார். புரிந்ததாயோ? **நிறைவேற்ற முடியாத லீதியாக்கள் உங்களைத் தடுக்க இடங் கொடுத்து விட்டீர்களோ? பணம், பதவி, பாசம், பாதுகாப்பு, சொத்து, கௌரவம் என்று பல லீதியாக்கள் உங்களை தடுத்து விட்டனவோ? ஆண்டவர் இன்று கூட உன்னை அழைக்கிறார். லீதியாக்களுக்கு விடை கூறி விட்டு விரைந்து வா! ராஜா வருகிறார் ஆயத்தமாகு ஆயத்தமாகு.**

**சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.**

கிறிஸ்துவின் பணியில்

**வேதநாயகம் சுமணன்**

# வித்திடும் வித்தகர்கள்

## ஹட்சன் டெய்லர்

தொடர்ச்சி

## ஒரு வழி அடைப்பும் மறுவழி திறப்பும்!

ஸ்வாட்டோவுக்குப் போக முடியாதவாறு தேவனே தடையைப் போட்டார் என ஹட்சன் உணர்ந்து கொண்டார். நிங்போவில் சிறந்த பெயருடன் அல்டெர்சியின் கல்விக் கூடம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஹட்சன், செல்வி அல்டெர்சியின் அழைப்புக்கிணங்க அவர்கள் வீட்டில் நடைபெறும் ஜெபக் கூட்டங்களை பொறுப்பேற்று நடத்தினார். ஹட்சனின் பரிசுத்த வாழ்வு, தன்னுடைய சேவையில் முழு மூச்சுடன் செயற்படும் திறன் தேவனுடனான நெருங்கிய உறவு என்பன அங்கிருந்தவர்களை ஹட்சனை நோக்கி இழுத்தது.

மிஷனெரி வேலை மிக விறுவிறுப்பாக நிங்போவில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அக்காலகட்டத்தில் ஆங்கிலேயர் சீனாவுடன் ஒப்பியம் என்ற போதைப் பொருளுக்காக சண்டை செய்ய ஆயத்தப்பட்டனர். போதைப் பொருளை தன் நாட்டுக்குள் கொண்டு வரக் கூடாது என சீன அதிகாரம் கட்டளை பிறப்பித்தது. ஆனால் அதனை விற்பதற்காக முயற்சித்து சண்டைக்கு ஆயத்தமாயினர் ஆங்கிலேயர். இதனாலே நிங்போவில் மிஷனரிகளின் நிலை ஆபத்துக்குள்ளானது. சீனர்கள் மற்றைய நாட்டினரை அழிக்க முற்பட்டனர்.

செல்வி அல்டெர்சி மற்றும் அவர்களின் கீழுள்ளவர்களுக்குமான ஏற்ற பாதுகாப்புக்களை செய்யும் பொறுப்பை ஹட்சன் எடுத்துக் கொண்டார். பிற்பாடு நிங்போவிலுள்ள வீட்டை விட்டு வெளியேறி சாங்கைக்குச் சென்றார் ஹட்சன்..

தொடரும்

# அனலின் நற்செய்தி

**நற்செய்திப் பகுதி**

17ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில், சரே மாகாணத்தில் சீயாம் என்ற கிராமத்தில் ஜாண் ஹக்கெட் என்ற போதகர் ஒரு ஞாயிறு காலை ஆராதனை நடத்தினார். அக்காலத்தில் இங்கிலாந்தில் கிறிஸ்தவத்தை பிரசங்கிக்கக் கூடாது என்று அரசாங்க சட்டம் இருந்தது. அது தெரிந்தும் இப்போதகர் ஆலய கதவைச் சாத்திவிட்டு பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

சற்று நேரத்தில் கதவு திறக்கப்பட்டது: ஒரு சிப்பாய் கையில் துப்பாக்கியுடன் உள்ளே வந்தான். நேரே பிரசங்க பீடத்திற்குப் பக்கத்தில் போய் நின்று "**உம்முடைய பிரசங்கத்தை நிறுத்தும்படி கட்டளையிடுகிறேன்**" என்றான். போதகர் அவனைச் சற்று நேரம் பார்த்து விட்டு "**தேவனுடைய ஊழியனாக நான் என் வேலையைச் செய்கிறேன்: சிப்பாயாக நீ செய்ய வேண்டியதைச் செய்**" என்று சொல்லி விட்டுத் தன் பிரசங்கத்தைத் தொடர்ந்தார்.

சிப்பாயோ திரும்பவும் அவரைப் பிரசங்கத்தை நிறுத்தும்படி பணித்தான். போதகர் அவனைப் பார்த்து, "**சிப்பாயே, உன்னுடைய வேலை என்னைச் சுட வேண்டியது: என்னுடைய வேலை ஆண்டவருடைய சத்தியத்தை எடுத்துரைப்பது. இருவரும் அவரவர் வேலையைச் செய்வோம்**" என்று கூறிவிட்டுத் தன் பிரசங்கத்தைத் தொடர்ந்தார். அச்சிப்பாய் தன் துப்பாக்கியைத் தூக்கி குறி பார்த்தான், ஆனால் சடுதியில் துப்பாக்கியை இறக்கிப் பிடித்து மடமடவென்று ஆலயத்தை விட்டு வெளியேறினான்.

"**அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்: என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன்: ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்" (சங்கீதம் 91:14, 15)**

"**கர்த்தர் உன்னைக் காக்கிறவர் கர்த்தர் உன் வலது பக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார்.**"

"கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார், அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்." (சங்கீதம் 121:5,7)

வாசித்துக் கொண்டிருக்கும் நண்பரே! கடந்த வருஷம் ஆபத்தில் இருந்த போது யாரை நோக்கிப் பார்ப்பது என்று தெரியாத உங்களுக்கு இந்தப் புதிய வருஷம் ஓர் புதிய செய்தியைக் கொடுக்கிறது. **இயேசு ஆபத்துக்களை மாற்றிப் போடுகிறவர் இன்றே இந்த இயேசுவை அறிவாயா?** தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

## வினாவிடை 37

*01. அக்கிரமத்தைப் பெறக் கர்ப்ப வேதனைப்படுகிறவன் யார்?*
*02. தேவனைத் தேடாதவன் யார்?*
*03. பள்ளத்தாக்கின் வாசலை கட்டியது யார்?*
*04. வேதாகமத்தில் "வேதபாரகன்" என்ற சொல் முதலில் யாருக்கு வழங்கப்பட்டது?*
*05. தான் பயந்தது தனக்கு நடந்தது என வேதனைப்பட்ட பக்தன் யார்?*
*06. தரிக்கக்கூடாத வேஷம் என்ன?*
*07. மிகுந்த ஆதாயம் எது?*
*08. சண்டையின் ஆரம்பம் எப்படி இருக்கும்?*
*09. யாருடைய ஆசை அவனைக் கொல்லும்?*
*10. எதைக்குறித்து மேன்மை பாராட்ட வேண்டும்?*



## வினாவிடை 36 சரியான விடை எழுதியவர்கள்.

01. S. மனோகரி - நீர்வேலி
02. ச. யோகேஸ்வரி - மீசாலை
03. ச. சனோஜா - மீசாலை
04. S. மாக்கிரட் - மீசாலை
05. R. மேரி கொன்சி - திருநெல்வேலி

# தேவ பிரசன்னமும் மெய்யான விடுதலையும்

பழைய ஏற்பாட்டிலே மோசே மலையிலே தேவனுடைய பின்பக்கத்தைக் கண்டார். மோசே தேவனுடைய சமூகத்தை உணர்ந்தவன் என்பதைக் குறித்து வேதத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. பிதாவானவரை வேறு எந்த மனிதனும் கண்டதில்லை, அதன் பிற்பாடு புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து வந்தார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து முப்பத்துமூன்றரை வருடங்கள் பூமியிலே இருந்தார். அவர் பூமியிலே இருந்த பொழுது முப்பதாவது வயது தொடக்கம் முப்பத்து மூன்றரை வயது வரைக்கும் *அவர் ஜனங்களோடு சேர்ந்திருந்தர், பாவிகளோடு இருந்தார், ஜனக்கூட்டத்திலே இருந்தார்*, அவர் ஜனங்களோடு மிக நெருக்கமாக இருந்தார். பிற்பாடு அவர் மரித்து உயிரோடு எழுந்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிற பொழுது வாக்குப் பண்ணினார், *உங்களோடு என்றென்றைக்கும் இருக்கக் கூடியதான தேற்றரவாளனாகிய பரிசுத்தாவியானவரை உங்களுக்குத் தருவேன்*. இதன் அடிப்படையில் நாங்கள் தேவனைக் குறித்துப் பார்க்கிற பொழுது அவருடைய நல்ல நோக்கம் என்னவென்றால் *எவ்வளவாய் மனிதனோடு நெருங்க முடியுமோ அவ்வளவாய் படிப்படியாக தேவன் நெருங்கினார். இது தேவனுடைய இரக்கம், கிருபை*. நாங்கள் பாவிகளாயிருந்தோம், ஆனால் தேவன் எங்களோடு எவ்வளவு அதிகமாய் சேர முடியுமோ அவ்வளவாய் கிட்டிச் சேர்ந்தார். இப்படிப்பட்ட ஒரு நல்ல தேவனே எங்களுக்கு இருக்கிறார். எங்களை அபிஷேகித்து எங்களோடு ஒன்றாயிருக்கிற ஒரு தெய்வம் எங்களுக்கு உண்டு, இவ்வளவாய் தேவன் எங்களோடு சேர இருக்கிறதினாலே அவர் தன்னுடைய குமாரன் மூலமாய், அவருடைய இரத்தம் சிந்தப்பட்டதின் மூலமாய் பெரியதொரு ஒப்புரவை எங்களோடு ஏற்படுத்தி வைத்திருக்கிறார். ஆகவே அந்தத் தேவனுடைய எதிர்பார்ப்புக்கேற்றதாய் நாங்களும் அவரோடு எவ்வளவாக நெருங்கிச் சேர முடியுமோ, அவருடைய பிரசன்னத்திலே எவ்வளவு மூழ்க முடியுமோ அவ்வளவாய் நெருங்கிச் சேர வேண்டும். பிரசன்னம் என்றால் என்ன? நாங்கள் ஒரு இடத்திலே சமூகமளித்திருக்கிற பொழுது அதை நாங்கள் இந்த இடத்திலே பிரசன்னமாகியிருக்கிறோம் என கூற முடியும். தேவனுடைய பிரசன்னம் என்றால், தேவனுடைய சமூகம் என்றால் தேவன் அந்த இடத்திலே இருப்பதாகும். இயேசுகிறிஸ்து எங்கே எல்லாம் போனாரோ அவருடைய சமூகம் அங்கே எல்லாம் இருந்தது. தேவனுடைய சமூகத்தை தேவனுடைய பிரசன்னத்தை வாஞ்சிக்கிறவர்கள் எப்படியாய் மாற்றப்பட்டார்கள், விடுதலையடைந்தார்கள் எப்படி கர்த்தருக்காய் வாழ்ந்தார்கள் என்பதைக் குறித்துப் பார்ப்போம். பார்த்து நாங்களும் தேவ பிரசன்னத்தை வாஞ்சிப்போம். தேவனிடத்திலிருந்து விடுதலையையும் பெற்றுக் கொள்வோம்.

(லூக்கா 19:1–9) லூக்கா 19:2,3,4 ஆயக்காரருக்குத் தலைவனும், ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன், *இயேசு எப்படிப்பட்டவரோ*

***என்று அவரைப் பார்க்க வகைதேடினான்.*** அவன் குள்ளனானபடியால் ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல் அவர் போகும் வழியில் முன்னாக ஓடி அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இந்த சகேயுவுக்குள் இருந்த வாஞ்சை, ஒரு தடவையாவது இயேசுவைப் பார்க்க வேண்டும், அவரை நான் தரிசிக்க வேண்டும் என்கிறதான வாஞ்சை. நாங்கள் எத்தனை நாட்கள் எங்களுடைய ஜெப அறையில், அல்லது கடந்து சென்ற நாட்களில் இயேசுவே நான் உம்மை உணர வேண்டும், நான் உம்மைப் பார்க்க வேண்டும் என வாஞ்சித்திருக்கிறோம். சகேயு தேவனுடைய பிரசன்னத்தை ஒரு தடவை அனுபவிக்க ஆவலாயிருந்தான். இயேசுவோ அந்த இடத்தில் வந்த போது அண்ணாந்து பார்த்து அவனைக் கண்டு சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கி வா இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்க வேண்டும் எனக் கூறினார். இதற்கு சகேயு எந்த மாறுத்தரமான வார்த்தைகளையும் பேசவில்லை மாறாக வேதம் சொல்லுகிறது, அவன் சீக்கிரமாய் இறங்கி சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டு போனான். (லூக்கா 19:6) இவன் இப்பொழுது இயேசுவுக்குக் கிட்ட வந்து விட்டான். மேலேயிருந்த இந்த சகேயு இயேசுவினுடைய சமூகத்திற்கு (பிரசன்னத்துக்கு) கிட்டே வந்து விட்டான். இதனால் என்ன நடந்தது தெரியுமா? அவனுக்கு யாருமே நீ பாவம் செய்தாய் என்று சொல்லவில்லை, மாறாக அவன் அந்த தேவனுடைய பிரசன்னத்தை அனுபவித்ததினாலே இவ்விதமான ஒரு அறிக்கையை செய்தான், சகேயு நின்று கர்த்தரை நோக்கி ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாகத் திரும்பக் கொடுக்கிறேன் என்றான். (லூக்கா 19:8) ***அவன் தேவனுடைய பிரசன்னத்துக்கு கிட்ட வந்த போது குற்ற உணர்வு அடைந்தான். தேவ சமூகம் அவனை உணர்வடையப் பண்ணியது. தேவ சமூகம் அவனைச் சிந்திக்கத் தூண்டியது. தேவனுடைய பிரசன்னம் அவனை மாற்றியது.*** சகேயு நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் எனக் கூறியதான இந்த வார்த்தையானது ஆண்டவர் நாலாந்தலைமுறை வரைக்கும் அக்கிரமத்தை விசாரிக்கிறவர் எனவே இந்த சகேயு தேவ பிரசன்னத்துக்குள்ளே வந்த போது தன் வாழ்க்கைக்குரிய மன்னிப்பையும் பெற்றான், அத்தோடு தன்னுடைய சந்ததி காக்கப்படுவதற்குரிய காரியத்தையும் செய்தான். தேவன் விரும்புகிறபடி எங்களுடைய வாழ்வு இன்னும் மாறவில்லையென்று சொன்னால் நீங்கள் தேவனுக்கு முன்பாக முழங்கால் படியிட்டு ஆண்டவரே நான் உம்முடைய பிரசன்னத்தை உணர விரும்புகிறேன், தேவனே உம்முடைய பிரசன்னத்தை எனக்குத் தாரும், உம்முடைய பிரசன்னத்தில் என்னை வெளிச்சத்துக்குக் கொண்டு வாரும் எனக் கேட்டுப் பாருங்கள். ஆண்டவருடைய பிரசன்னம் வருகிற இடத்தில் பாவங்கள் வெளியே வரும், மனந்திரும்ப வேண்டிய எல்லாக் காரியங்களையும் தேவன் உணர்த்துவார். அவர் உங்களுடைய வாழ்விலே ஒரு புதிய காரியத்தை எழுதுவார். இயேசுவுக்கு அப்படிப்பட்ட வல்லமையுண்டு. நீங்கள் அவருடைய பிரசன்னத்தை உணர வேண்டும், அவருடைய சமூகத்தை நாட வேண்டும் என வாஞ்சித்தால் உங்களுடைய சொந்த வாழ்க்கையிலே அற்புதம், உங்களுடைய சந்ததியினுடைய வாழ்விலே நன்மையுண்டாகும்.

(லூக்கா 7:37 – 48) *ஒரு பாவியாகிய ஸ்திரி, இயேசு பரிசேயனுடைய வீட்டிலே இருக்கிறார் என்பதை அறிந்து அவரிடத்திலே வருகிறாள்.* தேவன் இருக்கிறதான அந்த சமூகத்தை நாடுகிறாள், அவள் இவ்விதமாகப் போய் ஆண்டவருக்கு ஒரு காரியத்தை செய்கிறாள். அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து பரிமள தைலத்தைப் பூசினாள். இவள் இவ்விதமாக செய்த போது இயேசு அவளை நோக்கி, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். உண்மையில் தேவனுடைய பிரசன்னத்தை வாஞ்சித்துத் தேடி அந்தப் பிரசன்னத்துக்குள்ளே போகின்ற போது தான் உண்மையான பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ள முடியும். நாங்கள் எத்தனை தடவைகள் பாவ அறிக்கை செய்திருக்கிறோம். ஆனால் உண்மையில் குற்ற உணர்வோடு இருதயம் குற்றப்பட்டு பாவ அறிக்கை செய்தோமா அப்படியொரு நிலைக்கு எம்மைக் கொண்டு வருகிறவர் தேவன். அந்தத் தேவனுடைய சமூகத்திலே போனால் தான் உண்மையான பாவ அறிக்கையை செய்ய முடியும், உண்மை யான பாவ மன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். தேவ சமூகத்தை வாஞ்சித்துப் பாருங்கள் அப்பொழுது உங்களுடைய பாவங்கள் அடுக்கடுக்காக வெளியே வரும். இதற்கு உதாரணமாக என்னுடைய வாழ்க்கை யிலே இடம் பெற்றதான ஒரு சம்பவத்தை உங்களுக்கு நான் கூறுகிறேன்.

ஒரு நாள் நான் உபவாசம் இருந்து ஜெபிக்க வேண்டும் என்கிறதான தீர்மானத்தை எடுத்து, முதலாம் நாள் உபவாசித்து என்னுடைய சபைக்காகவும், ஊழியர்களுக்காகவும், விசுவாசிகளுக்காகவும், தேசத்திற்காகவும் ஜெபித்தேன் அது நன்றாக இருந்தது. முதலாம் நாள் உபவாசம் மிகவும் சந்தோஷமாக இருந்தது, அடுத்த நாளும் ஜெபித்தேன் அந்த நாள் ஜெபித்ததும் மிகவும் சந்தோஷமாக இருந்தது, இவ்விதமாக தொடர்ந்து ஒன்பது நாட்கள் செய்தேன். அந்த நாட்கள் மிகவும் சந்தோஷமாகத் தான் இருந்தது. இவ்விதம் ஜெபித்த அந்த ஒன்பது நாட்களும் பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு பெரிதாக எனக்குள்ளே வரவில்லை. நான் நினைத்தேன் முன்பே பாவ அறிக்கை செய்திருந்ததால் ஆண்டவர் என்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னித்து விட்டார், எனக்குள் எந்த ஒரு பாவமும் இருக்கவில்லை என்பதாகத் தான் எண்ணியிருந்தேன். மன்னிக்கப்படாத பாவம் எனக்குள் இருக்கிறது என்கிறதான உணர்வு எனக்கு இருக்கவேயில்லை. நான் தொடர்ந்து உபவாசம் பண்ணி ஜெபித்த போது பத்தாவது நாள் ஒரு பெரிதான பாவப் பட்டியல் என் கண்களுக்கு முன்பாகத் தெரிந்தது. நான் எதையெல்லாம் பாவம் இல்லையென்று நினைத்தேனோ, இதனாலே தேவ நாமத்துக்கு இழுக்கு வராது என நினைத்தேனோ ஆண்டவர் அவை எல்லாவற்றையும் பாவப் பட்டியலிலே போட்டுக் காண்பித்தார். இந்தப் பாவங்கள் பதுங்கியிருந்தது, ஆனால் தேவ பிரசன்னத்துக்குள்ளே அதிகமாய்ப் போன பொழுது தேவன் அதை வெளியே கொண்டு வந்தார். தேவ பிரசன்னத்தை வாஞ்சித்துக் கதறிய போது தேவ பிரசன்னத்திற்கு முன்பாக பாவங்கள் மறைந்து இருக்க முடியவில்லை. எல்லா விதமான பாவக் காரியமும் அந்தப் பிரசன்னத்தினாலே உடைத்து எறியப்பட்டது, தேவன் அதை அறிக்கை செய்யப்பபண்ணினார். உண்மையான பாவ மன்னிப்பை

தேவ பிரசன்னத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். பதுங்கியிருக்கிற பாவத்தை வெளியே கொண்டு வருவது தேவ பிரசன்னம். தேவ பிரசன்னத்திலிருந்து உங்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பாருங்கள், சில வேளை உங்களுடைய வாழ்க்கையிலே பாவம் இல்லையென நீங்கள் இதுவரை காலமும் எண்ணியிருக்கலாம், இன்றைய நாளிலே தேவ பிரசன்னத்துக்குள்ளாய் கடந்து போகிற போது உங்களைப் பாவத்தைக் குறித்த குற்ற உணர்வு அடையப்பண்ணுவார் ஆண்டவர். தேவ பிரசன்னம் எங்களைப் பாவத்திலிருந்து வெளியே கொண்டு வரும், எங்களை மாற்றும்.

(லூக்கா 18:35 – 37) இந்த சம்பவமானது இயேசு எரிகோவுக்கு சமீபமாய் வருகிற போது ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான், அப்பொழுது அவன் இயேசு அங்கு வருகிறதை அறிந்து இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். இந்த மனுஷனால் பார்க்க முடியாது, போக முடியாது ஏனென்றால் அவனுக்கு கண்கள் தெரியாது, ஆனால் அவராலே தனக்கு இரக்கம் செய்ய முடியும் என்பதை உணர்ந்து தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்றான். இவனுடைய கண் பார்வையடைவதற்கு இவனுக்கு வேண்டியதாய் இருந்தது என்ன தெரியுமா? அந்த இயேசு அவனுக்குக் அருகே வர வேண்டும், அல்லது இவன் இயேசுவுக்குக் அருகே போக வேண்டும். இயேசு அவனைக் கூட்டிக் கொண்டு வாருங்கள் என்றார். அவன் தேவ சமூகத்துக்குள்ளே போன போது அவனுடைய வாழ்க்கையிலே ஜெயம். அவனுடைய வாழ்க்கையிலே அற்புதம். நாங்கள் அனேக சந்தர்ப்பங்களிலே கிறிஸ்துவை வாஞ்சிப்பதை விட்டு விட்டோம். தேவனை நாடுவதை விட்டு விட்டோம், தேவ ஆராதனைகள், கூட்டங்களுக்கு செல்வதை மறந்து போய் விட்டோம். தேவ பிரசன்னம் எங்களுடைய வியாதியிலிருந்து விடுதலையைத் தரும். பாவத்திலிருந்து விடுதலையைத் தரும், தேவ பிரசன்னம் சத்துருவினுடைய கட்டிலிருந்து விடுதலையைத் தரும். நாங்கள் பார்க்கிறோம் கிறிஸ்து வந்த போது அவனுக்கு விடுதலை கிடைத்தது. ஆண்டவருடைய பிரசன்னத்தை வாஞ்சித்துக் கதறுகின்ற போது கர்த்தர் அதைக் கேட்பார். நீங்கள் வியாதியோடு, பிரச்சினைகளோடு ஏங்கிக் கொண்டிக்கலாம், ஆனால் இன்றைக்கு அந்தத் தேவ பிரசன்னத்துக்குள்ளாகச் சென்று பாருங்கள். ஆண்டவரே நீர் எனக்கு இரங்கும், உமது பிரசன்னத்தைத் தாரும், உம்முடைய சமூகம் எனக்குக் கிட்டவாய் வரட்டும் என்று கேட்டு உங்கள் வியாதிகளை, பிரச்சினைகளை ஆண்டவருக்குச் சொல்லிப் பாருங்கள். தேவ பிரசன்னம் வருகிற போது உங்களுடைய வியாதிகள் உங்களை விட்டு நீங்கிப் போகும் ஏனென்றால் தேவன் எங்கேயிருக்கிறாரோ அங்கே விடுதலையுண்டு.

குர்ஷான் எஸ்தர் என்ற பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு பெண்மணி இருந்தாள். பிறப்பிலிருந்தே அவளால் எழுந்து நடமாட முடியாது. பதினெட்டு வருடங்களாய் அவள் படுக்கையிலேயே இருந்தாள். தனக்குத் தெரிந்த எல்லாத் தெய்வங்களையும் கூப்பிட்டு, விண்ணப்பித்துப் பார்த்தாள் ஒன்றும் நடக்கவில்லை.

இறுதியாக ஒரு நாள் அவள் இயேசுவே உம்மைத் தெய்வம் என்று சொல்லுகிறார்கள், நான் எல்லாத் தெய்வங்களையும் என்னுடைய நிலையை மாற்றும்படியாக கேட்டு விட்டேன் எந்தப் பதிலும் இல்லை, பலன் அளிக்கவும் இல்லை, ஆனால் இன்றைக்கு உம்மை நோக்கிப் பார்க்கின்றேன் நீர் மெய்யான தெய்வமானால் எனக்கு சுகம் தாரும் என்றாள்.ஒரு நாள் இரவு அவளுடைய அறைக்குள்ளாக ஒரு பெரிய பிரகாசம் வந்தது, இயேசு அங்கே வந்தார், அவள் அப்படியே எழுந்திருந்தாள். இன்றைக்கு தேவனுக்காக வைராக்கியமாக ஊழியம் செய்கிறாள். தேவ பிரசன்னம் வருகிற இடத்திலே விடுதலை கிடைக்கிறது. நீங்களும் பிரச்சினை, வேதனைகளோடு போராடிக் கொண்டிருப் பீரகளாக இருந்தால் இப்புதிய ஆண்டிலே தேவனின் சமூகத்தை தேடுங்கள், அவருடைய பிரசன்னத்தை வாஞ்சியுங்கள் மெய்யான விடுதலையைப் பெற்றுக் கொள்வீர்கள்.

**போதகர். வேதநாயகம் மகாராஜா**



# குறுக்கெழுத்துப் போட்டி 34
## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. அல்லேலூயா
07. கனி
09. உப்பு
08. தன்

**மேலிருந்து கீழாக**

02. இஸ்ரவேலின் ராஜா
04. மன்னிப்பு
01. அன்பு
06. இரவு

**வலமிருந்து இடமாக**


05. வேதாகமத்தில்
02. இசை
10. ஜாதி
07. கஷ்ரம்

**கீழிருந்து மேலாக**

04. மல்கியா
06. இல்லாமல்



# குறுக்கெழுத்துப் போட்டி - 35



### இடமிருந்து வலமாக

1. கர்த்தருடைய தன்மைகளில் ஒன்று.
3. யோபுவிடம் ஆரம்பத்தில் இருந்த ஏர் மாடுகளின் எண்ணிக்கை.
7. இயேசுவை பெற்ற போது மரியாளுக்கு இங்கே இடம் கிடைக்கவில்லை.
4. தாவீது எத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்று .......... கர்த்தர் தனக்கு கட்டளையிட்டதிலே ஒன்றையும் விட்டு விலகாதிருந்தான்.

### வலமிருந்து இடமாக

5. இயேசுவண்டை வந்த அனைவரும் வியாதியில் இருந்து ......... பெற்றனர்.
8. நிக்கொதேமு...........க்காலத்தில் இயேசுவிடம் வந்தான்.

### மேலிருந்து கீழாக

2. இஸ்ரவேலர் நாற்பது வருடங்களாக இங்கே சுற்றித்திரிந்தார்கள்.
6. பழைய ஏற்பாட்டில் பலிகளுடன் சம்மந்தப்பட்டது புறாவின் இப்பருவம்.

### கீழிருந்து மேலாக

8. இது சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பில்லை
7. இயேசு தாவீதின் ..................... இல் பிறந்தார்.
9. எகிப்திலே மந்திரவாதிகளால் அற்புதம் செய்ய முடியாமல் போன போது மோசே செய்த அற்புதத்தைப் பார்த்து இது கர்த்தருடைய .......... என்றனர்.




# ஆவிக்குரிய போராட்டம் 03

இயேசுவுக்குப் பேதுரு, யோவான், யாக்கோபு போல தாவீதுக்கு மூன்று நெருங்கியவர்கள் இருந்தனர். **இவர்களின் பெயர்;** (2சாமுவேல் 23:8-11) யோசெப்பாசெபேத், எலெயாசார், சம்மா இவர்கள் தாவீது பெத்லகேமிலுள்ள கிணற்றுத் தண்ணீரின் மீது கொண்ட வாஞ்சையை அறிந்தனர். **உடனே எதிரியின் பக்கம் சென்று நீர் கொண்டு வந்து கொடுத்தனர்.** தாவீதோ குடிக்காமல் கர்த்தருக்கென்று ஊற்றி விட்டான். (1நாளா 11:18-19) **கல்வாரியில் வெளிப்பட்ட கிறிஸ்துவின் அன்பை ருசி பார்த்த எமக்கு இது எவ்வளவு நிந்தையைக் கொண்டு வருகிறது.** இயேசுவின் நிமித்தம் நம் வாழ்க்கையை ஆபத்திற்குள்ளாக்க நாம் விரும்புகிறோமா? **தாவீது இந்த மக்களிற்கு என்னத்தை கொடுத்தான்.** அவன் மனிதர்களுக்காகப் பாடுபட்டு மரிக்கவில்லை. **ஆனாலும் அவர்கள் தங்கள் ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாய் இருந்தார்கள.** இதுவே தாவீதின் வெற்றிக்கு ஆதாரமாய் இருந்தது. **தாவீதிடம் அவனை நேசிக்கும் மக்கள் இருந்தனர்.** பெத்லகேமின் தண்ணீரைக் குடிப்பதற்கு தங்கள் ஜீவனையே அர்ப்பணிக்க ஆயத்தமுள்ள மக்கள் இருந்தனர். **ஆதி சபையிலும் இப்படியே இருந்தது.** பவுல், பர்னபாவைக் குறித்து வேதம்; இயேசுவுக்காக தங்கள் பிராணனையும் ஒப்புக் கொடுக்க துணிந்தவர்கள் என்கிறது. (அப்போஸ்தலர் 15:25) எனவே ஆபத்தை எதிர் நோக்கக் கூடிய மக்கள் வேண்டும். **இயேசுகிறிஸ்துவுக்கென்று தங்கள் ஜீவனையும் கொடுக்கத் துணிந்தவர்கள் வேண்டும்.** போர் என்பது முக்கியமானது. **அது சிறுபிள்ளை விளையாட்டு அல்ல. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது** முசோலினி **இத்தாலிய இளைஞர்களை இராணுவத்தில் சேரும்படி சவால் கொடுத்துக் கொண்டு இருந்தான்.** ஒருவன், நான் இராணுவத்தில் பெயர் பதிவு செய்தால் என்னத்தைப் பெற்றுக் கொள்ளவேன் என்றான். **நீ காயங்களையும், பாடுகளையும், நோவையும்தான் பெற்றுக் கொள்வாய்:** உங்களில் சிலர் முடமாகுவீர்கள், மற்றோர் மரிப்பீர்கள் **ஆனால் உங்கள் நிமித்தமாக இத்தாலி வாழும் என்றான் முசோலினி.** அந்த இளைஞர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்தார்கள். **அவன் இத்தாலி வாழ்வை விரும்பினான்.** இப்போது உங்களுக்கு ஒரு தகுந்த காரணம் இல்லையா? **தேவ சேனைக்கு மனிதர்கள் தேவைப்படுகிறார்கள்** நீங்கள் பெயர் பதிவு செய்து விட்டீர்களா? உங்களுக்கு வேடிக்கையும் விநோதமும் சுகபோகமும் வாக்குப்பண்ணபடவில்லை. **மாறாக,**

✳ முற்றுமான அர்ப்பணத்திற்கும்

✳ ஜீவனையும் கொடுக்க துணியவும் தேவன் உங்களை அழைக்கிறார்.

தொடரும்

**(கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர் இன்பரூபன்)**

# ஒரு வாசகரின் சாட்சி

கர்த்தருக்குள் பிரவேசித்த போதகர் சி.பி.டி அருமைநாயகம் அவர்கள் 1959ம் ஆண்டு கந்தர்மடம் கந்தபுராண வீதியில் தொடங்கிய ஊழியம் பத்து குடும்பங்களைக் கொண்டதாக இருந்தது. மேலும் அரசடி வீதி, பலாலி வீதி, கச்சேரி நல்லூர் வீதி ஆகிய இடங்களில் ஆராதித்து இறுதியாக இராமையாச் செட்டியார் ஒழுங்கையில் அமைந்து இருக்கும் சீயோன் தேவாலயம், இருபத்து நான்கு கிளைகளுடன் யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய கிறிஸ்தவ சபையாக விளங்கி வரும் இவ்வேளையில் 50ஆவது நிறைவைக் கொண்டாட தேவன் கொடுத்த ஈவுக்காகவும், இச் செய்தியை அனல் பத்திரிகை மூலம் "விடுதலையின் அறைகூவல்" என போதகர் ஜோகனன் அவர்கள் இக்காலத்துக்கு ஏற்ற விதையாக கொடுத்ததையுமிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். அன்று சீயோன் தேவாலய கட்டட வேலையில் நானும் கலந்து கொண்டு பணியில் ஈடுபட்டேன். முக்கியமாக ஆலய உட்கிணற்று வேலை குறிப்பிடத்தக்கது. மற்றும் ஆலய கட்டட வேலையில் உதவி செய்தவர்கள் இன்று சீயோனின் ஊழியர்களாக இருக்கின்றார்கள். இதில் மானிப்பாயில் ஊழியம் செய்யும் தேவா போதகர் மிகவும் இளமைத் துடிப்புடன் ஓடி வேலை செய்தவர். தேனீர் மற்றும் உணவுப் பொருட்களை தயார் செய்து தந்த பெண்களுடைய வேலையை மறக்க முடியாது. சபைப் போதகர் யொசாயா அவர்கள் மிகவும் அன்பாகவும், பண்புடனும் நன்றி கலந்த உள்ளத்தோடும் ஈடுபட்டார். திருமதி மாட்டின், திருமதி. துரைராஜசிங்கம் போன்றவர்கள் நாளுக்கு நாள் வந்து செல்வார்கள். நான் அரசாங்கப் பணியில் இருந்தபடியால் எனக்கு கிடைத்த லீவு நேரங்களை ஆலயத்தின் கட்டிட வேலைப்பணிக்கு ஒப்புக் கொடுத்தேன், தற்போது ஒரு காலை இழந்துள்ளேன். எத்தனையோ மரண இருள் என்னைச் சூழ்ந்து கொண்ட போதும் இயேசுகிறிஸ்து விடுதலை தந்தார். கர்த்தருக்குள் பிரவேசித்த போதகர் மா.இன்பரூபன் அவர்கள் 11.12.1997ம் ஆண்டு தொடக்கம் 11.01.98 வரை நான் வைத்தியசாலையில் இருந்த போது ஒரு நாளைக்கு மூன்று வேளையும் வந்து என்னைப் பார்வையிட்டார். அவர் ஜெப வாஞ்சையுள்ள ஒரு ஊழியன். மறக்க முடியாத செய்தி 01.01.98 அன்று எனக்கு 2மணிக்கு அறுவை சிகிச்சை, ஆலய வேலையை முடித்துக் கொண்டு என்னை வந்து பார்த்தார் போதகர் யொசாயா அவர்கள். போதகர் இன்பரூபன் மரிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன் கோயில் வீதியில் என்னைக் கண்டு இறங்கி, எனக்காக ஜெபம் செய்தார். போதகர் யொசாயா, போதகர் இன்பரூபன் அவர்கள் என்னைத் தங்கள் தந்தையின் இடத்தில் வைத்தே பார்த்தனர். நான் ஒரு கிறிஸ்தவ விசுவாசியானபடியால் இச் சீயோன் தேவாலயம் 50வது வருட நிகழ்வை கொண்டாடும் இவ் வேளையில், தேவன் தாமே என்னை தாங்கி இன்றுவரை ஜீவனுள்ளோர் தொகையில் வைத்தபடியால் நன்றி செலுத்துகின்றேன்.

**சகோ. அருளம்பலம் பிலிப்**

# புத்தாண்டில் அற்புதத்தின் அறைகூவல்

## The LORD will do wonders among you.

## கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்வார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நல் நாமத்தில் அனல் வாசகர்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். 2009ஆம் ஆண்டு எல்லோருடைய வாழ்க்கையிலும் பலதரப்பட்ட சம்பவங்களுடன் முடிவடைந்துள்ளது. ஆனாலும் 2009ம் ஆண்டில் ஆண்டவர் எமக்கு கொடுத்த வாக்குத்தத்தம்

***"உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்"*** சங்கீதம் 23:4 என்ற வாக்குத்தத்தம் எல்லோருடைய வாழ்க்கையிலும் உண்மையாகவே இருந்துள்ளது. சீயோன் சபை கடந்த ஆண்டு 50 வருடத்தை பூர்த்தி செய்துள்ளது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மத்திய ஆகாயத்தில் திரும்பவும் வரும்வரை சீயோன் சபை தேவ கிருபையினாலே நிலைத்து நிற்கும் என்று வாஞ்சிக்கிறோம்.

2010ம் ஆண்டில் பிரவேசிக்கும் உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் கொடுக்கிற வார்த்தை ***"கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார்"*** **யோசுவா** 3:5 (**"The LORD will do wonders among you" Joshua 3:5**) ஆண்டவர் வாக்குப் பண்ணினால் அதை அவர் நிச்சயமாகவே செய்து முடிக்க வல்லமையுள்ளவர். வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே வாக்கு மாறா உண்மை நாதரே. விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று பரிசுத்த வேதாகமம் தெளிவாகக் கூறுகின்றது. இந்தப் புதிய ஆண்டில் தேவன் தந்த வாக்குத்தத்தை விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை நிச்சயமாகவே காண்பீர்கள்.

உங்களுடைய வாழ்க்கையில் ஆண்டவர் அற்புதம் செய்வார் என்று விசுவாசிப்பவர்களுக்கு நிச்சயமாகவே அற்புதம் நடப்பதற்கு சில காரியங்களைச் செய்ய வேண்டும்.

பழைய ஏற்பாட்டைப் பார்க்கும் போது யோசுவாவுக்கும், இஸ்ரவேலருக்கும் முன்பாக யோர்தான் நதி குறுக்கிட்ட போது அவர்களது வாழ்க்கையில் யோர்தான் நதி அகல வேண்டியிருந்தது. அதே போல உங்களுடைய வாழ்க்கையிலும் யோர்தான் நதி போல தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற முடியாதபடி குறுக்கே நிற்கின்ற காரியங்களை நிச்சயமாக ஆண்டவர் அகற்ற வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

யோசுவா 3ம் அதிகாரத்தில் பார்க்கிறோம், அவர்கள் யோர்தான் நதியைக் கடக்க ஐந்து காரியங்களைச் செய்ய வேண்டியதாய் இருந்தது. இதே ஐந்து காரியங்களையும் உங்களுடைய வாழ்க்கையில் கடைப்பிடித்தால் உங்கள் வாழ்க்கையினுடைய யோர்தானைக் கடக்க முடியும்.

1) அதிகாலமே எழுந்திருந்தார்கள் –

***யோசுவா 3:1 அதிகாலமே யோசுவா எழுந்திருந்த பின்பு, அவனும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் சித்தீமிலிருந்து பிரயாணம்பண்ணி யோர்தான் மட்டும் வந்து, அதைக் கடந்து போகுமுன்னே அங்கே இராத்தங்கினார்கள்.***

எங்களுடைய வாழ்க்கையிலும் நேரத்திற்கு காரியங்களை செய்ய வேண்டியது மிக அவசியம். சிலரை அவதானிக்கும் போது ஆலயத்திற்கு வரும் போது எப்போதுமே பிந்தி அதாவது ஆராதனை ஆரம்பித்ததும் வருவார்கள். இதைப் பழக்கமாகக் கொண்டுள்ளார்கள். பிந்தி வருதல் அது எல்லோருக்கும் குழப்பம். சிலர் சொல்வார்கள் நேரம் முக்கியமில்லையென; அது தவறு. ஏனெனில் ஆவியானவரின் அசைவாட்டத்துக்கு அது தடையாக இருக்கலாம், ஆண்டவரை அவமதிப்பதாய் இருக்கும். எனவே உங்களுடைய வாழ்க்கையில் நிச்சயமாக நேரத்திற்குக் காரியங்களை ஆயத்தப்படுத்த வேண்டும். அற்புதம் ஆண்டவர் செய்ய எதிர்பார்க்கும் நீங்கள் அந்தக் காரியத்திற்காக வேளைக்கே உங்களைத் தயார்ப்படுத்த வேண்டும். மரியாள் அதிகாலமே எழுந்து கல்லறையினிடத்துக்குப் போன போதே கல்லறை திறக்கப்பட்டதையும் இயேசு உயிர்த்தெழுந்த அற்புதத்தையும் கண்டாள்.

2) கட்டளையைப் பின்பற்றுதல் –

***யோசுவா 3:3,4 ஜனங்களை நோக்கி நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியையும் அதைச் சுமக்கிற லேவியராகிய ஆசாரியர்களையும் கண்டவுடனே நீங்களும் உங்கள் இடத்தை விட்டுப் பிரயாணப்பட்டு, அதற்குப் பின்செல்லுங்கள்.***
***உங்களுக்கும் அதற்கும் இடையிலே இரண்டாயிரம் முழத் தூரமான இடம் இருக்க வேண்டும்: நீங்கள் நடக்க வேண்டிய வழியை அறியும்படிக்கு, அதற்குச் சமீபமாய் வராதிருப்பீர்களாக: இதற்கு முன்னே நீங்கள் ஒரு போதுமே இந்த வழியாய் நடந்து போகவில்லை என்று சொல்லி கட்டளையிட்டார்கள்.***

ஆண்டவர், யோசுவா மூலம் இஸ்ரவேலர் எப்படி செயற்பட வேண்டும் என்று கட்டளையிடுகிறார். பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையில் ஆண்டவர் தருகின்றதான கட்டளையை நிச்சயமாகவே கடைப்பிடிக்கவே வேண்டும். அன்றைக்கு இஸ்ரவேலர்கள், யோசுவா தானே சொன்னார் இதைச் செய்ய வேண்டுமோ என்று அலட்சியப்படுத்தியிருக்கலாம், ஆனால் அப்படி அவர்கள் செய்யவில்லை. எனவே உங்களுடைய வாழ்க்கையிலும் யோர்தானைக் கடக்க வேண்டியுள்ளதா? தேவனுடைய வார்த்தையின்படி தேவ கட்டளைகளைப் பின்பற்ற வேண்டும். போதகர் அதைக் கூறினாலும் செய்யத்தான் வேண்டும். சிலர் சொல்லுவார்கள் தேவனுக்குப் பயப்பட வேண்டும், தேவன் சொன்னால் செய்ய வேண்டும், மனுஷர் சொன்னால் செய்யத் தேவையில்லையென. பிரியமானவர்களே அப்படி இஸ்ரவேலர் சொல்லியிருந்தால் அவர்கள் நிலை என்ன? எனவே உங்களுக்கு தேவன், தேவ மனுஷன் தரும் கட்டளைகள் நிச்சயமாகவே அவை சிறியதோ, பெரியதோ அப்படியே பின்பற்றப்பட வேண்டும். விரும்பினதைச் செய்து விரும்பாததை விடலாம் என்று சொல்லவே முடியாது.

நாகமான் எலிசாவிடம் வரும் போது, அவன் சொன்னான், ஏழு தரம் யோர்தானில் மூழ்கினால் குஷ்டரோகம் சுகமாகும். அவன் தேவ மனுஷனின் கட்டளையை கேட்டு செய்தபடியால் அவனுக்கு குஷ்டரோகம் சுகமானது.

### 3) பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள் –

***யோசுவா** 3:5A **யோசுவா ஜனங்களை நோக்கி உங்களைப் பரிசுத்தம்பண்ணிக் கொள்ளுங்கள்:***

தெளிவாக யோசுவா ஜனங்களைப் பரிசுத்தம் செய்யும்படி சொன்னதைக் காண்கிறோம். உங்களுடைய வாழ்க்கையில் யோர்தான் பிளக்கப்பட வேண்டியிருந்தால் உங்கள் வாழ்க்கை நிச்சயமாகவே பரிசுத்தமான வாழ்க்கையாய் இருக்க வேண்டும். கடைசிக்காலத்தில் பரிசுத்தத்தைக் காண்பது மிகக் கடினமான காரியமாக மாறிப் போகிறது. சிறிது சிறிதாக பாவம் நுழைந்து கொண்டிருக்கிறது. உலகம் சபைக்குள்ளும் ஜனங்களுக்குள்ளும் நுழையப் பார்க்கிறது. துர் உபதேசங்கள் மலிந்து போய் அதன் பக்கம் ஜனங்கள் சாய்ந்து போகக் கூடிய இந்த நிலையில், ஆண்டவர் உங்களிடம் எதிர்பார்க்கிற காரியம் உங்களை நீங்கள் பரிசுத்தம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

ஆண்டவர் நூறு வீத பரிசுத்தத்தை எல்லா தேவ பிள்ளைகளுடைய வாழ்க்கையிலும் எதிர்பார்க்கிறார். அன்றைக்கு இஸ்ரவேலர் தங்களைப் பரிசுத்தப்படுத்தியது போல புதிய வருடத்துக்குள் நுழைந்துள்ள நாம் நம் வாழ்க்கையைப் பரிசுத்தப்படுத்தினால்தான் இந்த வருடம் கர்த்தர் எங்கள் நடுவில் அற்புதங்களைச் செய்யும் வருடமாக அமையும். பரிசுத்தமில்லாமல் தேவனைத் தரிசிக்க முடியாது.

### 4) மிகப் பெரிய ஆண்டவரிடம் இருந்து மிகப் பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்

***யோசுவா** 3:5B **நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான்.***

யோசுவா ஜனங்களுக்காக இந்த வார்த்தையைத் தெரிவிக்கிறான். அற்புதம் நிச்சயமாக எமது ஆண்டவர் செய்வார் என எதிர்பார்க்க வேண்டியது அவசியம்.

பிரியமானவர்களே உங்களுடைய வாழ்க்கையில் சாபமா, பாவமா, வியாதியா எதுவாகவும் இருக்கட்டும். அது உங்களுடைய வாழ்க்கையில் உங்களுக்கு குறுக்காக நிற்கும் யோர்தான்; பெரிய விடயமல்ல, அந்த விடயங்களைப் பார்க்கிலும், எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து மிகப் பெரியவராகவே இருக்கிறார். எனவே சிறிய காரியங்களைப் பார்க்காமல் பெரிய காரியமாகிய தேவனை நோக்கிப் பார்க்கும் போது நிச்சயமாகவே உங்கள் எதிர்பார்ப்பு வீண் போகாது கர்த்தர் அதை வாய்க்கப்பண்ணுவார். அதிபதி ஒருவனின் வேலைக்காரன் வியாதிப்பட்ட போது அந்த அதிபதி இயேசுவை நோக்கி, விண்ணப்பம்பண்ணினான் அப்போது அவர் அவனுடன் வீட்டுக்குப் போக முற்பட்ட போது அவன் சொல்கிறான், ஆண்டவரே ஒரு வார்த்தை சொல்லும் அப்போது

அவன் பிழைப்பான் என்று. அவன் மிகப் பெரிய ஆண்டவரிடம் மிகப் பெரிய காரியத்தை எதிர் பார்த்தான் இயேசு ஒரு வார்த்தை சொன்ன போது அவன் பிழைத்தான்.

5) **விசுவாசத்துடன் அடியெடுத்து வைத்தல் –**

***யோசுவா 3:8 உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியரைப் பார்த்து நீங்கள் யோர்தான் தண்ணீர் ஓரத்தில் சேரும் போது யோர்தானில் நில்லுங்கள் என்று கட்டளையிடுவாயாக என்றார்.***

யோசுவா ஆசாரியரை நோக்கி இந்த வார்த்தையைச் சொல்லுகிறான், அவர்கள் விசுவாசத்தினால்தான் அந்த அடியெடுத்து வைத்தார்கள். மாறாக இந்தப் பெரிய யோர்தான் பிளக்குமா? என்று கேள்வி கேட்டு அவர்கள் பேசாமல் இருக்கவில்லை தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தார்கள், நம்பினார்கள் யோர்தானில் கால் பதித்தார்கள், அப்போது ஆண்டவர் அதை பிளக்கப்பண்ணினார். அதே போல் எந்தப் பெரிய யோர்தானாகவும் நீங்கள் நினைக்கலாம், இந்தப் புதிய ஆண்டில் தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பாயாக இருந்தால் தேவ மகிமையை எதிர்பார்த்து அந்த யோர்தான் போன்ற வழிகளில் உங்கள் கால்களை வையுங்கள்.

***யோசுவா 3:15,16 யோர்தான் அறுப்புக்காலம் முழுவதும் கரைபுரண்டுபோம். பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரின் ஓரத்தில் பட்டவுடனே,***
***மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானுக்கடுத்த ஆதாம் ஊர்வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது. உப்புக்கடல் என்னும் சமனான வெளியின் கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று: அப்பொழுது ஜனங்கள் எரிகோவுக்கு எதிரே கடந்து போனார்கள்.***

இப்படி ஐந்து காரியங்களை அவர்கள் செய்த போது யோர்தான் அவர்களுக்கு முன்பாக பிளவுபட்டது. பிரியமான தேவ ஜனமே! தேவனுடைய வார்த்தைக்குச் செவி சாய்த்து இந்த வருடத்தில் உன் வாழ்க்கையில் நீ அற்புதங்களை எதிர்பார்ப்பாயாக இருந்தால், நேரத்திற்குக் காரியங்களை ஆரம்பித்து, தேவ மனுஷர்களின் கட்டளைகளைக் கேட்டு அதின்படி கவனமாய் செய்து, உன்னுடைய வாழ்க்கையைப் பரிசுத்தப்படுத்தி மிகப் பெரிய தேவன் அற்புதம் செய்வார் என எதிர்பார்த்து, விசுவாசத்துடன் காலடி எடுத்து உன் குறுக்கே நிற்கும் யோர்தான் மேல் கால் வை. அப்போது கர்த்தர் உன் நடுவில் அற்புதம் செய்வதை உன் சொந்தக் கண்கள் காணும்.

**கர்த்தர் உங்கள் நடுவில் அற்புதம் செய்வார்.**
**The LORD will do wonders among you.**

*போதகர் ஜோகனன் டேவிஸ் பிலிப்*
*நிறைவேற்றுப் போதகர்*
*சீயோன் தேவாலயம் - யாழ்ப்பாணம்*

## சந்தா விபரம்

இச்சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம், (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L. Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L. Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L. Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L. Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / "ZION CHURCH" என எழுதப்பட வேண்டும்.

குறிப்பு : தற்போது ஏற்பட்டுள்ள கடதாசியின் விலையேற்றம், தபால் செலவு அதிகரிப்பு என்பவைகள் காரணமாக சந்தா அதிகரிக்கப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றி.

- ஆசிரியர் -

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்.

## சந்தா கூப்பன்

பெயர் : ____________________

விலாசம் : ____________________

____________________

____________________

____________________

தயவுசெய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.







To.

MISS.MATHANA GNANACHANDRAN
MADATHTHADI
ALVAAI EAST
ALVAAI

Zion Church Office
No. 347. Navalar Road,
Jaffna, Sri Lanka.

*St. Joseph's Catholic Press, 360. Main Street, Jaffna, Sri Lanka. T. P. 021-222 2378*